# आत्मनिर्भर र्◌ारत

## பகுதி-2 : புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட ஏழைகள்

सत्यमेव जयते
Government Of India

**14.05.2020**



**கோவிட்டுக்குப் பிந்தைய விவசாயிகள் & ஊரகப் பொருளாதாரத்துக்கு நேரடி உதவி**

- *ரூ.4.22 லட்சம் கோடி வேளாண்மைக் கடன் கொண்டுள்ள* ***3 கோடி விவசாயிகளுக்கு, கடனைத் திருப்பிச் செலுத்தும் அவகாசம் 3 மாதங்கள் நீட்டிப்பு.***
- *மார்ச் 1 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன்களை* ***உரிய காலத்தில் செலுத்துவதற்கான ஊக்கத் தொகை மற்றும் வட்டி தள்ளுபடி சலுகைகள் 31 மே 2020 வரையில் நீட்டிப்பு.***
- ***ரூ.25,000 கோடி கடன் வரம்புடன் 25 லட்சம் புதிய விவசாயிகள் கடன் அட்டைகளுக்கு*** *அனுமதி தரப்பட்டுள்ளது.*



## கோவிட்டுக்குப் பிந்தைய விவசாயிகள் & ஊரகப் பொருளாதாரத்துக்கு நிதி உதவி

- *1.3.2020 முதல் 30.04.2020 வரையில் வேளாண்மைக்கு* ***ரூ.86,600 கோடிக்கு 63 லட்சம் கடன்கள்*** *வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.*
- *கூட்டுறவு வங்கிகள், பிராந்திய ஊரக வங்கிகளுக்கு மார்ச் 2020-இல் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி)* ***ரூ.29,500 கோடி*** *மறுநிதியளிப்பு செய்துள்ளது.*
- *ஊரகக் கட்டமைப்பு வசதிகளுக்காக மார்ச் 2020-இல்* ***மாநிலங்களுக்கு ஊரகக்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூ.4,200 கோடி*** *உதவி.*
- *வேளாண் விளை பொருள்கள் கொள்முதலுக்கு மார்ச் 2020இல் இருந்து மாநில அரசு நிறுவனங்களுக்கு* ***ரூ.6,700 கோடி*** *நடைமுறை மூலதன வரம்புக்கு அனுமதி.*



# புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு கடந்த 2 மாதங்களில் உதவி

- **புலம் பெயர்ந்தவர்களுக்குத் தங்குமிடம் ஏற்படுத்துதல், அவர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் உள்ளிட்டவை வழங்குவதற்கு, மாநில பேரழிவு நிவாரண நிதியை (SDRF) பயன்படுத்திக் கொள்ள மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனுமதி** அளித்துள்ளது.

- **மாநில பேரழிவு நிவாரண நிதித்** தொகுப்பில் நிதியை அதிகரிப்பதற்காக, தனது பங்களிப்பு **ரூ.11002 கோடியை** அனைத்து மாநிலங்களுக்கும் **மத்திய அரசு** முன்கூட்டியே **வழங்கியது**.

- **நகர்ப்புற வீடற்றவர்களுக்கான முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு தினமும் 3 வேளை உணவு** சுகாதார முறைப்படி முடக்கநிலை காலத்தில் மார்ச் 28, 2020 முதல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

- 12,000 சுய உதவிக் குழுக்கள் **3 கோடி முகக்கவச உறைகள் மற்றும் 1.20 லட்சம் லிட்டர் கிருமிநாசினி** தயாரித்துள்ளன. இதனால் நகர்ப்புற ஏழைகளுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது.

- சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி முன்னோட்ட அடிப்படையில் குஜராத்தில் ஏப்ரல் 2020-இல் **PAiSA முனையம்** மூலம் செலுத்தப்பட்டது. இப்போது மே 2020ல் அனைத்து மாநிலங்களுக்கும் அந்த நடைமுறை பின்பற்றப் படுகிறது.

- 15 மார்ச் 2020-ல் இருந்து **நகர்ப்புற ஏழைகளுக்கு 7,200 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன**.





**திரும்பி வரும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) மூலம் உதவி**

- *13 மே 2020 வரையில் 14.62 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கம்.*
- ***இதுவரையில் சுமார் ரூ. 10,000 கோடி செலவிடப்பட்டுள்ளது.***
- ***நேற்று 1.87 லட்சம் கிராம பஞ்சாயத்துகளில் 2.33 கோடி கூலித் தொழிலாளிகளுக்கு வேலை தரப்பட்டது.***
- ***கடந்த ஆண்டு மே மாதத்தைவிட இப்போது 40 முதல் 50 சதவீதம் பேர் அதிகமாகப் பதிவு செய்துள்ளனர்.***
- ***கடந்த நிதியாண்டில் வழங்கிய ஊதியம் ரூ.182இல் இருந்து ரூ.202 ஆக உயர்வு.***
- ***திரும்பி வரும் புலம்பெயர் தொழிலாளர்கள் பெயர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை.***
- *புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சட்ட விதிகளுக்கு உட்பட்டு வேலைகள் வழங்க மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு அறிவுறுத்தல்.*
- *மழைக் காலத்திலும் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் (MNREGA) பணிகளைத் தொடரத் திட்டம்: தோட்ட வேலைகள், தோட்டக் கலைத் துறை வேலைகள், கால்நடைகளுக்கான கூடங்கள் அமைக்கும் பணிகள்*



**தொழிலாளர் விதிமுறைகள் - தொழிலாளர்களுக்குப் பயன்கள்**

- குறைந்தபட்ச ஊதியத்தை அனைவருக்கும் பொருந்துவதாக மாற்றம். அமைப்பு சாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்குதல் - இப்போது 30 சதவீத ஊழியர்களுக்கு மட்டுமே குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகிறது.

- தேசிய சம அளவு ஊதியத்துக்கான சட்டப்பூர்வக் கோட்பாடு அறிமுகம்: குறைந்தபட்ச ஊதியம் மாநிலங்களுக்கு இடையில் மாறுபடுவது குறையும்.

- குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் எளிமையாக்கம் செய்யப்பட்டதால், குறைந்தபட்ச ஊதிய விகிதங்களின் எண்ணிக்கை குறையும், அமலாக்கம் சிறப்பாக இருக்கும்.

- அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பணி நியமனக் கடிதம் - முறைப்படுத்தலை இது ஊக்குவிக்கும்.

- அலுவலர்களுக்கு வருடாந்திர மருத்துவப் பரிசோதனை.

- பணி சார்ந்த பாதுகாப்பு, ஆரோக்கிய (OSH) நடைமுறைகள் 10க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்டதாக இருந்தாலும் ஆபத்தான பணி சூழலில் செயல்பாடு உள்ள நிறுவனங்களுக்கும் பொருந்தும்.



**தொழிலாளர் விதிமுறைகள் - தொழிலாளர்களுக்குப் பயன்கள்**

- *மாநிலங்களுக்கு இடையிலான புலம் பெயர்ந்த தொழிலாளருக்கான வரையறை மாற்றம். ஒப்பந்ததாரர் மூலம் வேலை பார்த்த புலம் பெயர்ந்த தொழிலாளர்களுடன், வேறு இடத்தில் நேரடியாக வேலை பார்த்தவர்கள், அங்கிருந்து நேரடியாக வந்த தொழிலாளர்களும் இதில் சேர்க்கப்படுவார்கள்.*

- *புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு* **அனைத்துப் பகுதிகளிலும் நலத் திட்ட உதவிகளைப் பெறும் வசதி.**

- **அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டம்** *(ஈ.எஸ்.ஐ. திட்டம்)* **அமலாக்கம்.** *10 அல்லது அதற்கும் மேற்பட்ட அலுவலர்களைக் கொண்ட அனைத்து நிறுவனங்களுக்கும் இது அமல் செய்யப்படும். அறிவிக்கை செய்யப்பட்ட மாவட்டங்கள்/ பகுதிகளுக்கு மட்டும் என இருந்த நிலை மாறும்.*

- *10க்கும் குறைவானவர்கள் வேலைபார்க்கும் நிறுவனங்களில் விருப்ப அடிப்படையில்* **தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டம்** *(ஈ.எஸ்.ஐ. திட்டம்) விரிவாக்கம்.*

- *10க்கும் குறைவான தொழிலாளர்கள் இருந்தாலும் ஆபத்தான பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் மத்திய அரசின் அறிவிக்கை மூலம் கட்டாயமாக* **தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டம்** *(ஈ.எஸ்.ஐ. திட்டம்) அமல்.*



**தொழிலாளர் விதிமுறைகள் - தொழிலாளர்களுக்குப் பயன்கள்**

- ஒப்பந்த அடிப்படையில் நேரடியாகப் பணிபுரிவோர் மற்றும் இணையவழி மூலம் பணிபுரிவோருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்
- ஆட்குறைப்புக்கு ஆளான தொழிலாளர்களுக்கு மறு-திறன் வளர்ப்பு நிதி அறிமுகம்
- அனைத்துப் பணிகளிலும் மகளிருக்கு அனுமதி, உரிய பாதுகாப்புடன் இரவு ஷிப்டுகளிலும் பணிபுரிய அனுமதி.
- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு நிதிக்கு ஏற்பாடு.
- நிர்ணயித்த காலப் பணிக்கு பணிக்கொடை - 5 ஆண்டு பணி செய்திருக்க வேண்டும் என்ற விதி ஓராண்டு பூர்த்தி என மாற்றுவதற்குத் திட்டம்



# நேற்று அறிவித்த திட்டங்கள்

*பொதுவாக தொழில்களுக்கும், குறிப்பாக குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கும் ஏராளமான திட்டங்கள் நேற்று அறிவிக்கப்பட்டன. அனைத்துத் தொழில்களுக்கும் உதவக்கூடிய வகையிலான திட்டங்கள் உங்களுடைய புரிதலுக்காக பட்டியலிடப்பட்டுள்ளன:*

- *குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில்களுக்கு* ***ரூ.3 லட்சம் கோடிக்கு அவசரகால நடைமுறை முதலீட்டு நிதி வசதி****.*
- *ரூ.200 கோடி வரையிலான அரசு டெண்டர்களுக்கு, உலகளாவிய டெண்டர் கிடையாது.*
- *தொழில் நிறுவனங்கள் மற்றும் அமைப்புசார்ந்த தொழிலாளர்களுக்கான தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டம் (ஈ.பி.எப். உதவி) ஜூன், ஜூலை, ஆகஸ்ட் 2020 என அடுத்த 3 மாதங்களுக்கு நீட்டிப்பு - குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்* ***மற்றும் இதர தொழில் நிறுவன தொழிலாளர்களுக்கு பணம் கிடைக்கச் செய்ய இது உதவியாக*** *இருக்கும்.*
- *அனைத்து நிறுவனங்களிலும் முதலாளி மற்றும் தொழிலாளியின் ஈ.பி.எப். பங்களிப்பு அடுத்த 3 மாதங்களுக்கு 12சதவீதத்தில் இருந்து 10சதவீதமாகக் குறைப்பு. PMGKP-இல் வராத தொழிலாளர்களுக்கு இது பொருந்தும். இதன் நீட்டிப்பால் நடுத்தர வகுப்புத் தொழிலாளர்களுக்கு - குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்* ***மற்றும் பிற தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு உதவியாக*** *இருக்கும்.*
- *ஈ.பி.சி. மற்றும் சலுகை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட ஒப்பந்த கடமைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர்களுக்கான அவகாசம் ஆறு மாதங்கள் வரை நீட்டிப்பு.*
- *அறக்கட்டளைகள், கார்ப்பரேட் அல்லாத தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிபுணத்துவங்களுக்கு வர வேண்டிய வருமான வரி நிலுவைகளை உடனடியாக வழங்குவதால், தொழில் நிறுவனங்களுக்கு வரி நிவாரணம் கிடைக்க ஏற்பாடு.*
- *TDS மற்றும் TCS கீழ் வரி பிடித்தம் 2020-21 நிதியாண்டில் மீதம் உள்ள காலத்துக்கு 25 சதவீதம் குறைப்பு. வரி தொடர்பான பல்வேறு சமர்ப்பித்தல்களுக்கான கெடு நீட்டிப்பு -* ***இதனால் அனைத்துத் தொழில்களும் பயன்பெறும்.***



புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட ஏழைகள்

புலம் பெயர்ந்து வாழ்வோருக்கு 2 மாதங்களுக்கு இலவச உணவு தானிய விநியோகம்.

* பல்வேறு மாநிலங்களில் உள்ள இடம் பெயர்ந்தோருக்கு உணவு தானிய ஆதரவுத் தேவைப்படுகிறது.

* தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் அல்லது மாநில அட்டைப் பயனாளிகள் அல்லாத இடம் பெயர்ந்தோருக்கு அவர்கள் தங்கியுள்ள மாநிலங்களில் ஒரு நபருக்கு மாதம் 5 கிலோ தானியங்களும், ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ பருப்பும் இரண்டு மாதங்களுக்கு வழங்கப்படும்.

* புலம் பெயர்ந்து வாழும் 8 கோடி பேர் இதனால் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

* இந்த இடையீட்டுக்கு 2 மாதங்களில் ரூ 3500 கோடி செலவிடப்படும்.

* மொத்தச் செலவும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படும்.

* அமல்படுத்துத்தல், இடம் பெயர்ந்தோரை அடையாளப்படுத்துதல், மொத்த விநியோகம் மற்றும் விரிவான வழிகாட்டுதல்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு மாநில அரசுகள் பொறுப்பேற்கும்.

***

மார்ச் 2021க்குள் நாட்டின் எந்த நியாய விலைக் கடையிலும் பொது விநியோகத் திட்டத்தை (ரேஷன்) புலம் பெயர் தொழிலாளர்கள் அணுகும் வண்ணம் தொழில்நுட்ப அமைப்புகள் பயன்படுத்தப்படும் - ஒரே நாடு, ஒரே ரேஷன் அட்டை.

* இடம்பெயர்ந்த குடும்பங்களால் இதர மாநிலங்களில் உணவுப் பொருள்களை அணுக முடிவதில்லை.

* நாட்டின் எந்த நியாய விலைக் கடையிலும் பொது விநியோகத் திட்டத்தை இடம் பெயர்ந்த பயனாளி அணுகுவதை இந்தத் திட்டம் உறுதி செய்யும் (மாநிலங்களுக்கிடையேயான பெயர்வுத்திறன் வசதி 20 மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது).

* ஆகஸ்ட், 2020க்குள் பொது விநியோகத் திட்டத்தின் 83சதவீத மக்கள் தொகையைச் சென்றடையும் வகையில், 23 மாநிலங்களில் 67 கோடி பயனாளிகள் தேசிய பெயர்வுத்திறன் வசதியில் இணைக்கப்படுவார்கள்.

* மார்ச், 2021க்குள் 100 சதவீதம் தேசிய பெயர்வுத்திறன் வசதி அடையப்பட்டிருக்கும்.

* மார்ச், 2021க்குள் நியாய விலைக் கடைகள் தானியங்கிப்படுத்துதலை அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் முடித்திருக்கும்.

***

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் / நகர்ப்புற ஏழைகளுக்கு கட்டுபடியாகக்கூடிய வாடகை வீடு வளாகங்கள்.

கட்டுபடியாகக்கூடிய வாடகையில் வீடுகளைப் பெற இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் / நகர்ப்புற ஏழைகள் சவால்களை எதிர்கொள்கிறார்கள்.

வாழ்வதை எளிதாக்குவதற்காக இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் / நகர்ப்புற ஏழைகளுக்காக கட்டுப்படியாகக்கூடிய வாடகையில் பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தும்.

i. அரசு-தனியார் கூட்டு முறையில், நகரங்களில் உள்ள அரசு நிதியுதவியில் கட்டப்படும் வீடுகள் சலுகையின் கீழ் கட்டுப்படியாகக்கூடிய வாடகை வீடு வளாகங்களாக மாற்றப்படும்;

ii. கட்டுப்படியாகக்கூடிய வாடகை வீடு வளாகங்களை அவர்களது தனியார் இடத்தில் கட்டி செயல்படுத்த தயாரிப்பு தொழிற்சாலைகள், நிறுவனங்கள், சங்கங்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும்; மற்றும்

iii. கட்டுப்படியாகக்கூடிய வாடகை வீடு வளாகங்களைக் கட்டி செயல்படுத்த மாநில அரசு முகமைகள்/மத்திய அரசு நிறுவனங்களுக்கு இதே போன்ற ஊக்கத்தொகை அளித்தல்.

**விரிவான வழிகாட்டுதல்களை அமைச்சகம் வெளியிடும்.**

***

**முத்ரா-சிஷு கடன்களுக்கு ரூ 1500 கோடி வட்டி மானியம்**

*** முத்ராவின் கீழுள்ள சிறு தொழில்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன மற்றும் அவற்றின் மாதாந்திரத் தவணை செலுத்தும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளது.**

*** இந்திய ரிசர்வ் வங்கியால் கடன் தடைச் சலுகை ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.**

***  முத்ரா-சிஷு கடன்களின் தற்போதைய மதிப்பு ரூ 1.62 இலட்சம் கோடி ஆகும் (அதிகபட்ச கடன் தொகை ரூ 50,000)**

*** முறையாக செலுத்துவோருக்கு 2 சதவீதத்தை வட்டி தள்ளுபடியாக 12 மாதங்களுக்கு இந்திய அரசு வழங்கும்.**

***  முத்ரா-சிஷு கடன் தாரர்களுக்கு ரூ 1500 கோடி நிவாரணம்.**

**நடைபாதை வியாபாரிகளுக்கான ரூ 5000 கோடி சிறப்புக் கடன் வசதி**

- கொவிட்-19 பரவல் காரணமாக நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு

**நடைபாதை வியாபாரிகள் எளிதில் கடன் பெறும் வகையிலான சிறப்புத் திட்டத்தை அரசு ஒரு மாத காலத்திற்குள் தொடங்கும்.**

- ரூ.10,000 வரையிலான முதல்கட்ட மூலதனம்
- டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு ஊக்குவிப்பு நிதி வெகுமதி மற்றும் சிறந்த முறையில் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு முதலீட்டுக் கடன் அதிகரிக்கப்படும்.
- சுமார் 50 இலட்சம் நடைபாதை வியாபாரிகள் பயன்பெறுவர்.
- ரூ.5000 கோடிக்கு பணப்புழக்கம் ஏற்படும்

**வீட்டு வசதித் துறைக்கு ரூ.70,000 கோடி ஊக்குவிப்பு மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு கடன்சார் மானியத் திட்டம் நீட்டிப்பு**

- நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு (ஆண்டு வருமானம் ரூ 6 லட்சம் முதல் 18 லட்சம் வரை) கடன்சார் மானியத் திட்டம் 2017 மே மாதம் முதல் செயல்படுத்தப்படுகிறது.
- கடன்சார் மானியத் திட்டம் 2020 மார்ச் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.
- இதுவரை இத்திட்டம் 3.3 லட்சம் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு பயன் அளித்துள்ளது.
- **இத்திட்டத்தை 2021 மார்ச் மாதம் வரை அரசு நீட்டிக்கவுள்ளது.**

- 2020-21 –ஆம் ஆண்டில் 2.5 லட்சம் நடுத்தர வருவாய் குடும்பங்கள் பயனடையும்.
- வீட்டு வசதித் துறையில் ரூ.70,000 கோடிக்கு மேல் முதலீட்டுக்கு இது வழிவகுக்கும்.
- வேலை வாய்ப்புகளை இது உருவாக்கும்.
- உருக்கு, சிமெண்ட், போக்குவரத்து மற்றும் இதர கட்டுமானப் பொருள்களின் தேவையை அதிகரிக்கும்

**காடுவளர்ப்பு இழப்பீட்டு மேலாண்மை மற்றும் திட்டமிடுதல் ஆணைய நிதி மூலம் ரூ 6,000 கோடி வேலைவாய்ப்பு**

- நமது மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.
- காடுவளர்ப்பு இழப்பீட்டு மேலாண்மை மற்றும் திட்டமிடுதல் ஆணையத்தின்

  Compensatory Afforestation Management & PlanningAuthority (CAMPA) காடுவளர்ப்பு இழப்பீட்டு சட்டம், 2016-இன் கீழ் உருவாக்கப்பட்டது.
- ரூ.6,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு விரைவில் அனுமதி.
- மாநில அரசுகளால் பின்வரும் பணிகளுக்கு நிதி பயன்படுத்தப்படும்:
- நகர்ப்புறப்பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் **காடு வளர்ப்பு மற்றும் மரம் நடுதல் பணிகள்.**

- இயற்கை மறு உற்பத்தி மூலம் செயற்கை மறு உற்பத்தி.

- வன மேலாண்மை, மண், ஈரப் பாதுகாப்புப் பணிகள்.

- வனப்பாதுகாப்பு, வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான உள்கட்டமைப்பு மேம்பாடு, வனவிலங்குகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை உள்ளிட்டவை.

- **நகர்ப்புறங்கள், பேரூர்ப்பகுதிகள், ஊரகப்பகுதிகளில்** வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

- பழங்குடியினர், ஆதிவாசிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

**விவசாயிகளுக்கு கூடுதல் அவசரகாலப் பணி மூலதன நிதியாக 30000 கோடி ரூபாய் நபார்டு தேசிய வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கி (**National Bank for Agriculture and Rural Development - **NABARD**) **மூலம் வழங்கப்படும்.**

- சிறு மற்றும் குறு விவசாயிகளிடம் போதுமான அளவு நிதி ஆதாரமின்மை.
- மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகளே கடன் வழங்குவதற்கான முக்கிய ஆதாரங்கள்.
- **கிராமப்புற கூட்டுறவு வங்கிகளுக்கும், மண்டல ஊரக வங்கிகளுக்கும், பயிர்க்கடன் வழங்குவதற்கான தேவைகளுக்காக கூடுதல் நிதியுதவி ஆதரவாக 30,000 கோடி ரூபாயை, நபார்டு அளிக்கும்.**
- இந்த ஆண்டில் சாதாரணமான மறுநிதியுதவி முறைப்படி நபார்டு மூலமாக வழங்கப்படவுள்ள **90000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட கூடுதல் தொகையாகும்** இது.
- **முன்கூட்டியே வழங்கப்படும் ஆன் டேப் வசதி** (Front-loaded on-tap facility) வங்கிகள் வழங்கும்

கடனுக்கு ஏற்ப, 33 மாநில கூட்டுறவு வங்கிகள், 351 மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மற்றும்

43 மண்டல ஊரக வங்கிகளுக்கு வழங்கப்படும்.

- 3 கோடி விவசாயிகளுக்குப் பயனளிக்கும் -- பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அறுவடைக்குப் பிந்தைய ரபி பருவம் மற்றும் தற்போதைய கரீஃப் பருவத் (மே, ஜூன்) தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக.

# விவசாயக் கடன் அட்டைகள் (கேசிசி) மூலமாக இரண்டரை கோடி விவசாயிகள் பயனடையும் வகையில் 2 லட்சம் கோடி ரூபாய், சலுகைக் கடன்.

- விவசாயிகள் கடன் அட்டைகள் மூலமாக பிரதமர் கிசான் PM KISAN திட்டப் பயனாளிகளுக்கு சலுகைக் கடன் வழங்குவதற்காக **சிறப்பு நடவடிக்கை** மேற்கொள்ளப்படும்.
- **மீனவர்கள்** மற்றும் **கால்நடை வளர்ப்பு விவசாயிகளும்** இதில் அடங்குவர்.
- இத்தகைய விவசாயிகள், சலுகையுடன் கூடிய வட்டி விகிதத்தில் , அமைப்பு ரீதியிலான கடன் பெற இது வழி வகுக்கும்.
- **2 லட்சம் கோடி ரூபாய்** கடனுதவி மூலம் **2.5 கோடி விவசாயிகள்** பயன்பெறுவார்கள்.



सत्यमेव जयते
Goverment Of India

# நன்றி

## Thank You